வருடாந்த அறிக்கை 2017

சுற்றுலா அபிவிருத்தி நிதியம்

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

சுற்றுலா அபிவிருத்தி நிதியம்
வருடாந்தக் அறிக்கை - 2017

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

2019 ஆகஸ்ட் 28 ஆம் திகதி
கௌரவ ஜோன் அமரதுங்க
சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்

கௌரவ அமைச்சர் அவர்கட்கு,
குறிப்பு: சுற்றுலா அபிவிருத்தி நிதியம

சுற்றுலா அபிவிருத்தி நிதியம் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. குறித்த சட்டத்தின் 23 (1) ஆம் பிரிவுக்கு இணங்க இந்த நிதியத்தின் நிதி சார்ந்த வளங்கள் சுற்றுலாவின் முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்ற விடயத்தை தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். இந்த நிதியத்திற்கு நிதிகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அந்த நிதிகளைப் பகிர்ந்தளித்தல் முதலிய அம்சங்கள் கூறப்பட்ட 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்திற்கு இணங்க தீர்மானிக்கப்படுகின்றன.

2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் 23 (2) ஆம் பிரிவுக்கு இணங்க, சிவில் விமான சேவைகள் அதிகார சபை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு 1/3 மடங்கு சுற்றுலாப் பயணிகள் வருகை வரிகளை செலுத்துகின்றது. மேலும் நிதிகள் ஒரு காலாண்டு அடிப்படையில் 'சுற்றுலா அபிவிருத்தி வரியாக'கம்பனிகளின் மூலம் கூறப்பட்ட அந்த நிதியத்திற்குச் செலுத்தப்படுகின்றன.

2017 ஜனவரி முதல் திசம்பர் வரையான காலப்பகுதிற்குரிய மொத்த சுற்றுலா அபிவிருத்தி வரி 3932.64 மில்லியன் ஷரூபாவாகவிருந்தது. 2016 ஆம் ஆண்டில் இது 3664.15 மில்லியன் ஷரூபாவாகவிருந்தது.

2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்குறித்த நிதியத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட நிதிகளினதும் மற்றும் அந்த நிதியத்தினால் பகிர்ந்தளிக்கப்பட்ட நிதிகளினதும் விபரங்கள் இந்த அறிக்கையில் உள்ளடங்குகின்றன.
நன்றி,

இங்ஙனம் உண்மையுள்ள,

ஒப்பம்:
காவன் ரத்னாயக்க
தலைவர்
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

உள்ளடக்கம்

	பக்க இல:
அறிமுகம்	07
நிதி நிலைக் கூற்று	08
நிதி சார்ந்த செயலாற்றுகை பற்றிய கூற்று	09
காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று	10
பங்கு மாற்றங்களின் அறிக்கை	10
கணக்குகளுக்கான குறிப்புகள்	11-13

அறிமுகம்

'சுற்றுலா அபிவிருத்தி நிதியம்' 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் 23 (1) ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்டது. இந்த நிதியம் சுற்றுலாவின் அபிவிருத்திற்கும் அதன் மேம்பாட்டிற்கும் பயன்படுத்த வேண்டியதாகும்.

இந்த நிதியம் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் நிருவகித்து முகாமை செய்யப்படுகின்றது.

2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் 23 (2) ஆம் பிரிவுக்கு இணங்க, சிவில் விமான சேவைகள் அதிகார சபை 2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் 1/3 மடங்கு சுற்றுலாப் பயணிகள் வருகை வரியை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்துகின்றது. இந்த நிதி சுற்றுலா அபிவிருத்தி நிதியத்திற்கு வரவுவைக்கப்படுகின்றது.

மேலும், இந்த நிதிகள் 2003 இன் 23 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டு, அறவிடப்பட்டு சேகரிக்கப்படும் ஒரு சுற்றுலா அபிவிருத்தி வரியாக, பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு சுற்றுலா ஸ்தாபனத்திலிருந்தும் இந்த நிதியத்திற்கு செலுத்தப்படுகின்றன.

2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் 24 (8) ஆம் பிரிவின் பிரகாரம், நிதியத்திற்கு வரவுவைக்கப்படும் எல்லா நிதிகளும் பின்வருமாறு செலவு செய்யப்படுதல் வேண்டும்.

ய. 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் உரிய பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்திற்கு 70% வீதமான நிதித் தொகை

டி. 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் 33 ஆம் பிரிவின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை சுற்றுலா ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்திற்கு 12மூவீதமான நிதித் தொகை

உ. 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை சுற்றுலா அதிகார சபைக்கு 14% வீதமான நிதித் தொகை

ன. 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் 42 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை இணக்கல் சபைக்கு 4%வீதமான நிதித் தொகை

2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட நிதிகளினதும் மற்றும் அந்த நிதியத்தினால் பகிர்ந்தளிக்கப்பட்ட நிதிகளினதும் விபரங்கள் இந்த அறிக்கையில் உள்ளடங்குகின்றன.

உல்லாசப் பிரயாண அபிவிருத்தி நிதி
நிதி நிலை பற்றிய அறிக்கை
31 டிசம்பர் 2017வரையில் இருப்பில் உள்ளது

	குறிப்பு இலக்கம்	2017 ரூ.	2016 ரூ.
தற்போதைய சொத்துக்கள்			
பணமும் அதற்குச் சமமானவைகளும்		373,591,199.92	639,762,905.00
வரவுகள்	8	929,169,127.34	786,910,702.00
மொத்த சொத்துகள்		**1,302,760,327.26**	**1,426,673,607.00**
தற்போதைய படுகடன்கள்			
செலுத்தவேண்டியவை	9	5,385,778.10	4,409,944.00
சிரீலங்கா உல்லாச பிரயான அபிவருத்தி அதிகாரி		181,632,436.90	199,116,913.00
சிரீலங்கா உல்லாப்பிரயாண ஊக்குவிப்பு பணியகம்		908,162,184.42	995,584,564.00
இலங்கை ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்		155,684,945.87	170,671,640.00
சிரீலங்கா மகாநாட்டு பணியகம்		51,894,981.97	56,890,546.00
செலுத்தவேண்டிய மொத்தம்		**1,302,760,327.26**	**1,426,673,607.00**

05 முதல் 08 பக்கங்களில் உள்ள கணக்கியல் கொள்கைகளும் குறிப்புகளும் இந்த நிதி அறிக்கையின் ஒருங்கிணைந்த பகுதியாகும். இந்த நிதி அறிக்கைகள் தயாரித்து வழங்குவது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். மேலும் ,இந்த நிதி அறிக்கைகளை பணிப்பாளர் சபை ஏற்றுக்கொண்டு அதற்கு இணக்கமாக அவர்களின் சார்பில் கையெழுத்திட்டப்பட்டள்ளது.

ஜீ.ஏ.ஏஸ்.எஸ் குமார
பணிப்பாளர்/ நிதி முகாமைத்துவம்
இலங்கை உல்லாசப்பிரயாண அபிவிருத்தி அதிகாரி

பீ.யூ. ரத்னாயக்கா
பணிப்பாளர் நாயகம்
இலங்கைஉல்லாசப்பிரயாணஅபிவிருத்தி அதிகாரி

கவன் ரத்னாயக்கா
தலைவர்
இலங்கை உல்லாசப்பிரயாண அபிவிருத்தி அதிகாரி

உல்லாசப் பிரயாண அபிவிருத்தி நிதி
நிதி நிலை பற்றிய அறிக்கை
31 டிசம்பர் 2017 வரையில் வருட இறுதிவரைக்குமானது

	குறிப்பு இலக்கம்	2017 ரூ.	2016 ரூ.
வருமானம்			
வரிகள்	3	3,920,297,545.25	3,632,251,132.00
ஏனைய இறைவரிகள்	4	12,342,049.05	11,899,181.00
மொத்த வருமானம்		**3,932,639,594.30**	**3,644,150,313.00**
செலவினங்கள்			
நிதி நிர்வாகச்செலவு	5	7,963,924.09	6,699,806.00
நிதி செலவு	6	31,065.00	35,055.00
செலுத்தப்பட்ட நிதி	7	3,924,644,605.21	3,637,415,452.00
மொத்த செலவினங்கள்		**3,932,639,594.30**	**3,644,150,313.00**
குறித்த காலத்துக்குரியநிலுவை/(குறைநிலுவை)		-	-

பங்கு மாற்றங்களுக்கான அறிக்கை

2003 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ழே.28 மற்றும் 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க உல்லாசப்பிரயாண சட்டத்தின் படி இலங்கை உல்லாசப்பிரயாண அபிவிருத்தி அதிகாரசபையினால் உல்லாசப்பிரயாண அபிவிருத்தி நிதியும் முகாமைத்துவமும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. எனவே தான் உல்லாசப்பிரயாண அபிவிருத்தி நிதிக்கு பங்கு மாற்றங்களுக்கான அறிக்கை, பிரத்தியேகமாகத் தயாரிக்கப்படவில்லை. சுற்றுலா அபிவிருத்தி நிதியம். மேலும் நிதி பரிமாற்றத்தின் விளைவாக இந்த கொடுக்கல் வாங்கல்களின் மூலம் நிதியில் இலாப அல்லது ந'்டங்கள் கணிப்பிடப்படவில்லை. 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க உல்லாசப்பிரயாண சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு இந்த நான்கு நிறுவனங்களுக்கும் மொத்த தேரிய வருமானம் பின்வருமாறு பகிரப்பட்டுள்ளது.

சிரீலங்கா உல்லாச பிரயாண அபிவருத்தி அதிகாரி	14%
சிரீலங்கா உல்லாப்பிரயாண ஊக்குவிப்பு பணியகம்	70%
இலங்கை ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்	12%
சிரீலங்கா மகாநாட்டு பணியகம்	04%

உல்லாசப் பிரயாண அபிவிருத்தி நிதி
பணம் அதிகரித்துச்செல்வது பற்றிய அறிக்கை
31 டிசம்பர் 2017 வரையில் வருட இறுதிவரைக்குமானது

	குறிப்பு இலக்கம்	2017 ரூ.	2018 ரூ.
செயற்பாடு காரணமாக கிடைக்கும் பணம்			
வரவுகள்			
வரி		3,790,893,902.94	3,528,416,178.00
ஏனைய வரவுகள்		4,038,057.64	14,399,160.00
கொடுப்பனவுகள்			
கடன் வழங்கியவர்களுக்குசெலுத்தியவை - பணவகையில் கொடுபட்டவை		(4,056,960,725.81)	(3,317,615,388.00)
ஏனைய கொடுப்பனவுகள்		(4,142,940.19)	(14,573,176.00)
செயற்பாடுகள் காரணமாக கிடைத்த தேறிய பணம்		**(266,171,704.80)**	**210,626,774.00**
முதலீட்டு செயற்பாடுகளால் கிடைத்த பணம்			
இயந்திர உபகரணங்கள் கொள்வனவு		-	-
இயந்திர உபகரணங்களை விற்றுக் கிடைத்த வருமானம்		-	-
முதலீட்டு செயற்பாடுகளால் கிடைத்த தேறிய பணம்		**-**	**-**
நிதிச் செயற்பாடுகளால் கிடைத்த பணம்			
கடன்கள் மூலமாக கிடைத்த வருமானம்		-	-
கடன்களை மீளச்செலுத்தல் மூலமாக கிடைத்த வருமானம்		-	-
பங்கீடு /அரசுக்குச் செலுத்திய பங்கு		-	-
நிதிச்செயற்பாடுகளால் கிடைத்த தேறிய பணம்		**-**	**-**
பணமும் அதுபோன்றவைகளும் தேறிய குறை / (அதிகரிப்பு)		**(266,171,704.80)**	**210,626,774.00**
ஆரம்ப காலப்பிரிவில் கிடைத்த பணமும் அதுபோன்றவைகளும்		**639,762,904.72**	**429,136,131.00**
இறுதிக் காலப்பிரிவில் கிடைத்த பணமும் அதுபோன்றவைகளும்		**373,591,199.92**	**639,762,905.00**

கணக்கியல் துறைக்கான குறிப்புகள்

1. உல்லாசப்பிரயாணத்துறை அபிவிருத்தி நிதி

2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, 23 ஆம் பிரிவு (ஐ) கீழ் "உல்லாசப்பிரயாண அபிவிருத்தி நிதி" ஸ்தாபிக்கப்படும். இந்த நிதி அபிவிருத்தி மற்றும் உல்லாசப்பிரயாண ஊக்குவிப்பிற்காகப் பயன்படுத்தப்படும். 2003 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க நிதிச் சட்டம் மற்றும் 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க உல்லாசப்பிரயாணத்துறைச் சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் வுனுகு நிதி சேகரிப்பும் அவற்றைப் பயன்படுத்தலும் இடம்பெறும்.

2. கணக்குத் தேவைகள்

இலங்கையின் பொது நிதிக்கு அவசியமான தரங்களின் அடிப்படையில் இந்த நிதிக்கணக்கு தயாரிக்கப்பட்டது.

3. வரிகளும் - நிதிக்கான வளங்களும்

	2017 ரூ.	2016 ரூ.
வெளியில்செல்வதற்கான வரி	2,378,828,212.64	2,355,441,275.00
உல்லாசப்பிரயாணத்துறை அபிவிருத்தி வரி	1,541,469,332.61	1,276,809,857.00
மொத்தம்	**3,920,297,545.25**	**3,632,251,132.00**

3.1 வெளியில்செல்வதற்கான வரி

1/3 ஆம் இலக்க உல்லாசப்பிரயாணத்துறைச் சட்ட பிரிவு 23 (2) (அ) படி சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபை, இலங்கை உல்லாசப் பிரயாணத்துறை அபிவிருத்தி அதிகாரசபைக்கு வெளியில்செல்வதற்கான வரியைத் திருப்பிச்செலுத்தியது.

வெளியில்செல்வதற்கான வரி (EL)	2017 ரூ.	2016 ரூ.
ஜன - செப்டம்பர் 2017 காலப்பகுதியில் கிடைத்த தொகை	2,001,093,146.48	1,954,747,787.00
அக்டோ. - டிசம்பர் 2017 காலப்பகுதியில் கிடைத்த தொகை	377,735,066.16	400,693,488.00
வெளியில்செல்வதற்கான வரி மொத்தம்	**2,378,828,212.64**	**2,355,441,275.00**

2017 நவம்பர் - டிசம்பர் காலப்பகுதியில் வெளியில்செல்வதற்கான வரியாகக் கிடைத்த 'ரூபா .377,735,066.16 வரையப்பட்ட மதிப்பீட்டுக்கு விமானப்போக்குவரத்து அதிகாரி அந்தத்தொகையை மீளப்பெற்றுக்கொண்டது.

3.2. உல்லாசப்பிரயாணத்துறை அபிவிருத்திக்கான வரி

2003 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின்படி, ஒவ்வொரு உல்லாசப் பிரயாணத் துறை சார்ந்த நிறுவனமும் உல்லாசப்பிரயாணத்துயின் அபிவிருத்தி வரியைச் செலுத்த வேண்டும். இலங்கை உல்லாசப்பிரயாணஅபிவிருத்தி அதிகார சபை வுனுடு ஐ சேகரித்து உல்லாசப் பிரயாண அபிவிருத்தி நிதியின் வரவில் வைக்கப்பட்டும். 2017 வருடம் ஜனவரி முதல் டிசம்பர் வரையான காலப்பகுதியில், உல்லாசப்பிரயாண பயணிகளின் வருமானமாக 'ரூபா .992 மில்லியன் அறவிடப்பட்டது. அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான காலத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட 'ரூபா.549 மில்லியன் பெறப்பட்டுள்ளது. மேலும் இந்தத் தொகை வுனுடு சார்பாக கடந்த மூன்று ஆண்டுகளில் பெறப்பட்டது ஒவ்வொரு வருடமும் அக்டோபர்-டிசம்பர் மாத காலப்பிரிவில் வுனுடு சார்பாக சேகரிக்கப்பட்ட தொகையில் சதவீத அதிகரிப்பு என மதிப்பிடப்பட்டது,

உல்லாசப்பிரயாணத்துயின் அபிவிருத்தி வரி (TDL)	2017 ரூ.	2016 ரூ.
ஜன - டிசம்பர் 2017 காலப்பகுதியில் கிடைத்த தொகை	992,141,806.70	891,326,356.00
அக்டோ. - டிசம்பர் 2017 காலப்பகுதியில் கிடைத்த தொகை	549,656,830.58	386,010,865.00
TDL திருப்பிக் கிடைத்த தொகை	(329,304.67)	(527,364.00)
ஜன - டிசம்பர் 2017 TDL க்குக் கிடைத்த மொத்தத் தொகை	**1,541,469,332.61**	**1,276,809,857.00**

4. ஏனைய வருமானங்கள்

ஏனைய வருமானங்களைப் பொறுத்தவரை, குறிப்பாக நிதிச் சட்டத்தின் படி வுனுடு க்குச் செலுத்தவேண்டிய வரிகளைப் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் வரி செலுத்தத் தவறிய தன் காரணமாக விதிக்கப்பட்ட வட்டிவீதத்தின் மூலமாகக் கிடைத்த வருமானங்களாகும்.

	2017 ரூ.	2016 ரூ.
வருடத்தில் வட்டியாகத்திரட்டப்பட்ட வருமானம்	12,340,283.24	11,895,201.00
2012 ம் 2013 ம் வருடங்களுக்கு கணக்காய்வுக் கான கட்டணத்தின் VAT ஆக கிடைத்த வருமானம்	-	3,585.00
மேலதிக தபால்கட்டணமும் வங்கிக் கட்டணங் களும்	-	395.00
ஏனைய வருமானங்கள்	1,765.81	-
மொத்தம்	**12,342,049.05**	**11,899,181.00**

5. நிதியின் நிர்வாகச்செலவுகள்

	2017 ரூ.	2016 ரூ.
முத்திரைக்கட்டணங்கள்	73,000.00	55,575.00
நிர்வாகச்செலவுகள்	7,765,924.09	6,442,081.00
கணக்காய்வுக்கான கட்டணங்கள்	125,000.00	202,150.00
மொத்தம்	**7,963,924.09**	**6,699,806.00**

6. நிதிச் செலவுகள்

	2017 ரூ.	2016 ரூ.
வங்கிக் கட்டணங்கள்	31,065.00	35,055.00
மொத்தம்	**31,065.00**	**35,055.00**

7. நிதி ஒதுக்கீடு

2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க உல்லாசப்பிரயாணத்துறைச் சட்டத்தின் 24 (8) பிரிவின் படி நிதி ஒதுக்கீடுமேற்கொள்ளப்பட்டது

	2017 ரூ.	2016 ரூ.
இலங்கை உல்லாசப்பிரயாண அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA)	550,200,713.37	509,238,163.00
இலங்கை உல்லாசப்பிரயாண ஊக்குவிப்பு பணியகம் (SLTPB)	2,746,500,754.93	2,546,190,816.00

ஹோட்டல் முகாமைத்துவம் உல்லாசப்பிரயாணத் துறைக்கான இலங்கை நிறுவனம் (SLITHM)	470,957,352.59	436,489,854.00
இலங்கை மாநாடுகள் பணியகம் (SLCB)	156,985,784.32	145,496,618.00
மொத்தம்	**3,924,644,605.21**	**3,637,415,451.00**

8. கிடைத்த வருமானங்கள்

	2017 ரூ.	2016 ரூ.
வெளியில்சென்றவர்களிடமிருந்து அறவிடப்பட்ட வரிகள்	377,735,066.16	400,693,488.00
வுனுடு க்கு கிடைத்த வருமானங்கள்	549,656,830.58	386,010,865.00
கடனும் ஏனையவைகளும்	1,777,230.60	194,428.00
2012 ம் 2013 ம் வருடங்களுக்கு கணக்காய்வுக் கான கட்டணத்தின் VAT ஆக கிடைத்த வருமானம்	-	11,921.00
மொத்தம்	**929,169,127.34**	**786,910,702.00**

9. செலுத்தவேண்டியது

	2017 ரூ.	2016 ரூ.
TDF உடன் SLTDA C/A	509,834.00	-
திரட்டியசெலவுகள் - நிர்வாக க் கட்டணம்	4,149,333.10	4,101,333.00
திரட்டியசெலவுகள் - கணக்காய்வு கட்டணம்	353,920.00	213,245.00
திரட்டியசெலவுகள் - முத்திரை வரி	40,425.00	63,100.00
தற்போதுள்ள ஏனைய கடன்கள்	332,266.00	32,266.00
மொத்தம்	**5,385,778.10**	**4,409,944.00**

මගේ අංකය / எனது இல. / My No. } ரீஜபீ/ஏ/ரீடிஎப்/1/17/04	මගේ අංකය / உமது இல. / Your No. }	දිනය / திகதி / Date } 2018 ஆகஸ்ட் 26

தலைவர்,
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு

நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமை
(அ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் 24(3) ஆம் பிரிவு	சுற்றுலா அபிவிருத்தி வரியை முகாமைத்துவப்படுத்துவதற்கும் நிர்வகிப் பதற்குமான விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாண இலக்கம் 169(2)	காசோலை தேறுவதற்கு முன் சேவை நிறுவனம் சேவை வழங்கியதன் காரணமாக 07 காசோலைகளுக்குரிய ரூபா 143,505 தொகையை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

2.3 போதியளவான அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

நிர்வாகச் செலவினங்களை செலுத்துவதற்காக 2005 இன் 28 ஆம் இலக்க சுற்றுலா அதிகாரச்சட்டத்தில் ஏற்பாடுகள் வழங்காதிருக்கும் போது பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது நிர்வாகச் செலவினமாக ரூபா 7,765,924 தொகையொன்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாடுகளிலிருந்து உருவாகிய வருமானம் ரூபா 3,933 மில்லியனாக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டின் வருமானம் ரூபா 3,644 மில்லியன் ஆனமையால் வருமானத்தில் ரூபா 289 மில்லியன் தொகையான அதிகரிப்புக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் சுற்றுலா அபிவிருத்தி வரி வருமானம் ரூபா 265 மில்லியனால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் சேகரிக்கப்படும் குடியகல்வு வரிப் பணத்தில் 1/3 பங்கு மற்றும் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் தொடர்பான அதிகாரச்சட்டத்தின் கீழுள்ள சுற்றுலா அபிவிருத்தி வரி நிதியத்தின் வருமானமாவதுடன், அந்த பணம் சுற்றுலா வணிகத்தின் மேம்பாடு அல்லது அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படும் செலவினங்களுக்காக இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகம், இலங்கை சுற்றுலா ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை சம்மேளன பணியகம் போன்றவற்றிற்கு கிடைக்கும் பணத்தில் முறையே 70, 12, 14 மற்றும் 4 சதவீதம் படி வழங்குவதற்கு அதிகாரச்சட்டத்தில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், மீளாய்வாண்டின் போது மேற்கூறப்பட்ட நிறுவனங்களுக்கு முறையே ரூபா 2,747,251,224, ரூபா 470,957,352, ரூபா 549,450,245 மற்றும் ரூபா 156,985,784 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 3,924,644,605 தொகைகள் வழங்கப்பட்டிருந்தன.

4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 2(ஆ) பிரிவின் பிரகாரம் இங்கையிலிருந்து வெளியேறுகின்ற கப்பலில் இலங்கையிலிருந்து வெளியே செல்கின்ற பிரயாணியொருவருக்காக விநியோகிக்கப்படுகின்ற கசல பிரயாணச் சீட்டுக்களுக்கும் வரி அறவிடப்பட்டு அதன் ஒரு பகுதி

அதிகார சபைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு கப்பல் மூலம் பயணம் செய்கின்ற பிரணாயிகளிடமிருந்து வரி அறவிடப்பட்டு அதிகாரசபைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. 2017 ஆம் ஆண்டின் போதுகுடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் தகவல்களின் பிரகாரம் 27565 பிரயாணிகள் வெளிநாடு சென்றிருந்தமையால் அதற்காக ஒரு பிரயாணியிடமிருந்து அமெரிக்க டொலர் 1.66 வீதம் மீளாய்வாண்டில் நிதியத்திற்குக் கிடைக்க வேண்டிய ரூபா 6,406,106 தொகையான குடியகல்வு வரி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் தகவல்களின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டின் போது இலங்கையிலிருந்து விமானம் மூலம் வெளியே சென்ற 02 வயதிற்குக் மேற்பட்ட இலங்கையினதும் வெளிநாட்டவர்களினதும் எண்ணிக்கை 3,653,370 ஆனமையால் நிதியத்திற்கு விமானம் மூலம் வெளியே சென்ற பிரயாணிகளுக்காக ரூபா 2,557,359,000 குடியகல்வு வரி வருமானம் கிடைக்க வேண்டியிருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் குடியகல்வு வரியாக ரூபா 2,378,828,212 தொகையே அறிக்கையிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 178,530,788 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்	அவதானிப்புக்கள்
(அ) குடியகல்வு வரியைச் சேகரித்தல்	(i) கப்பல் மூலம் பிரயாணம் செய்கின்ற பிரயாணிகளிடமிருந்து வரி அறவிடப்படாமை.
	(ii) விமானம் மூலம் பிரயாணம் செய்கின்ற பிரயாணிகளிடமிருந்து அறவிடப்படுகின்ற வரி, குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் தகவல்களின் பிரகாரம் இணங்காமை.

(ஆ) சுற்றுலா வரி அபிவிருத்தி வரி சேகரித்தல்	நுகர்வோர்களிடமிருந்து அறவிடப்பட்ட வரியின் அளவிற்கும் நிதியத்திற்கு அறவிடப்பட்டிருந்த வரித் தொகைக்கும் இடையே வேறுபாடு காணப்பட்டமை.

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

இலக்கம் 80, காலிவீதி, கொழும்பு 03.

www.sltda.gov.lk